Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.289/2016

**Depositions of PW- 3**

| Name | திரு.அழகர்ராஜ் | Occupation | கிராமநிர்வாக அலுவலர் |
|---|---|---|---|
| Father's name | ஆறுமுகம் | Calling | |
| Village | திருவில்லிபுத்தூர் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08th day of October 2025.

08.10.2025

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்ட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது வடக்கு திருவில்லிபுத்தூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.06.2015 ம் தேதி பிள்ளையார்குளம் கிராம நிர்வாக அலுவலராக பணியிலிருந்தபோது எனது அலுவலகத்திற்கு மதியம் சுமார் 2.30 மணியளவில் விருதுநகர் மாவட்ட காவல்துறையினர் அலுவலகத்திற்கு வந்து எனது கிராமத்திற்குட்பட்ட மொட்டைமலை அருகிலுள்ள சுந்தரபாண்டியன் என்பவருக்கு சொந்தமான பிரித்திவி கிரானைட் குவாரியில் சட்டவிரோதமாக ஆபத்து விளைவிக்கக்கூடிய வெடிபொருட்கள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக ரகசிய விசாரணையில் தெரிய வருவதால் மேற்படி கல்குவாரியை ஆய்வு செய்ய உடனிருந்து ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொண்டதன் பேரில் காவல்துறையினருடன் நானும் எனது கிராம உதவியாளர் சமுத்திரக்கனி என்பவரும் கல்குவாரிக்கு சென்றோம். கல்குவாரியில் சாமிஅண்ணன் என்பவர் மேலாளராக பணிபுரிந்து வந்தார். அவரிடம் இது தொடர்பாக காவல்துறையினர் விசாரணை செய்தபோது பூமிக்கு அடியில் அலுமினியம் டெட்டனேட்டர் எண்ணம்.111, ஜெல்லேட்டின் குச்சிகள்.131, 60 மீட்டர்நீளமுள்ள கருந்திரி மருந்து ஆகியவற்றை காவல்துறையினரால் கைப்பற்றப்பட்டது. மேலாளர் சாமிகண்ணனிடம் விசாரணை செய்தபோது அவர் மேற்படி வெடிபொருட்கள்

சங்கரன்கோவிலை சேர்ந்த ஸ்ரீபாலன் Explosive உரிமையாளர் ராமசாமி என்பவர் பதுக்கி வைத்திருப்பதாக எங்கள் முன்னிலையில் கூறினார்.

சட்டவிரோதமாக வெடிபொருட்களை பதுக்கியது சம்மந்தமாக போலீசார் அதை கைப்பற்றி சாமிஅண்ணன் என்பவரையும், வன்னியம்பட்டி காவல்நிலையத்திற்கு அழைத்துச்சென்றனர். மாலை சுமார் 5 மணியளவில் திருவில்லிபுத்தூர் நகர் காவல் ஆய்வாளர் அவர்கள் மீண்டும் என்னையும் கிராம உதயிவாளரையும் சம்பவம் நடந்த இடத்திற்கு அழைத்துச்சென்று அங்கு தோண்டப்பட்ட இடத்தையும் அதை சுற்றியுள்ள இடத்தையும் ஆய்வு செய்து அந்த இடத்தில் பார்வை மகஜர் ஒன்று தயார் செய்தனர். அந்த பார்வை மகஜரில் சாட்சியாக நானும் கிராம உதயிவாளரும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். **பார்வை மகஜர் அ.சா.ஆ 1 ஆகும்**. பின்னர் சம்பவ இடத்தில் வைத்து எனது முன்னிலையில் வெடிபொருட்களை கைப்பற்றினார்கள். கைப்பற்றியதற்காக நானும் கிராம உதவியாளரும் கையெழுத்து செய்தோம் என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். **அத்தாட்சி அ.சா.ஆ 2 ஆகும்**. பின்னர் கைப்பற்றப்பட்ட பொருட்களை போலீசார் காவல்நிலையத்திற்கு எடுத்துச்சென்றார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

நான் கடந்த 15 வருடங்களாக கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.06.2015 அன்று போலீசார் என்னை விசாரித்தபோது மேற்படி சம்பவம் நடந்த இடத்தின் சர்வே எண் பற்றி அவர்களிடம் கூறினேன். மேற்படி சம்பவயிடத்தின் உரிமையாளர் தொடர்பான ஆவணங்களை போலீசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. சம்பவயிடத்திற்கு நான் எனது இருசக்கர வாகனத்தில் மதியம் சுமார் 2.30 மணியளவில் சென்றேன். நான் சம்பவயிடத்திற்கு சென்றபோது அங்கு மேலாளர் சாமிஅண்ணனும், மேலும் இரண்டு நபர்களும் இருந்தார்கள். நான் சம்பவயிடத்திற்கு சென்ற சமயத்தில் தான் போலீசாரும் அங்கு வந்தனர். போலீசார் சம்பவயிடத்திற்கு வந்தபோது சாமிஅண்ணன் ஆகியோர் சம்பவயிடத்திலிருந்து தப்பிக்க முயன்றார்களா என்றால் இல்லை. மேற்படி சம்பவம் தொடர்பாக போலீசாருக்கு யார் தகவல் தெரிவித்தார்களா என்றால் போலீசாருக்கு ரகசிய

தகவல் கிடைத்ததாக என்னிடம் கூறினார்கள். சம்பவயிடத்தில் கற்கள் போன்றவை தான் இருந்தது வேறு எந்த பொருட்களும் அங்கு இல்லை. சம்பவயிடத்திற்கு சென்று அரைமணிநேரம் அங்கு இருந்தோம். சம்பவயிடத்திற்கு சென்ற உடனேயே நாங்கள் அங்கு தோண்ட ஆரம்பித்துவிட்டோம்.

மேற்படி இடத்தை தோண்டிய நபர்கள் பற்றி எனக்கு தெரியாது. சம்பவயிடத்தில் வைத்து பொருட்கள் கைப்பற்றினார்கள். அதுபற்றி வன்னியம்பட்டி காவல்நிலையத்திற்கும் சுமார் 3 மணியளவில் தகவல் தெரிவித்தார்கள். ஆனால் அங்கு வன்னியம்பட்டி காவல்நிலைய காவலர்கள் வந்தார்களா என்பது பற்றி எனக்கு தெரியாது. சம்பவத்தன்று என்னைத்தவிர வேறு யாரும் அத்தாட்சியில் கையெழுத்து செய்தார்களா என்பது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் நான் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன். மேற்படி அத்தாட்சியை வன்னியம்பட்டி காவல்நிலையத்தில் வைத்து காவலர் ஒருவர் தயார் செய்தார். அவர் யார் என்பது பற்றி எனக்கு தெரியாது. நான் மேற்படி கையெழுத்து செய்துவிட்டு எனது அலுவலகத்திற்கு சென்றுவிட்டேன்.

அதன் பின்பு சாமி அண்ணனிடம் கையெழுத்து பெற்றார்களா என்பது பற்றி எனக்கு தெரியாது. சம்பவத்தன்றே மாலை 5 மணியளவில் போலீசார் என்னை ஒரு இடத்திற்கு வரச்சொல்லி என்னை விசாரித்தனர். எதற்காக மேற்படி இடத்திற்கு வரச்சொன்னார்கள் என்பது பற்றி என்னிடம் போலீசார் கூறவில்லை. எனக்கும் அது பற்றி தெரியாது. பார்வை மகஜரில் வெடிபொருள் பதுக்கி வைத்திருந்தது சம்மந்தமாக எழுதப்பட்டிருந்தது அதில் நான் கையெழுத்து செய்தேன். அது தவிர வேறு எந்த விவரங்களும் பார்வை மகஜரில் இல்லை என்றால் சரிதான். சம்பவத்தன்று தவிர மற்ற நாட்களில் போலீசார் என்னை விசாரிக்கவில்லை. இன்று மேற்படி சம்பவம் தொடர்பாக எதிரிகளுக்கு தண்டனை வழங்குவது தொடர்பாக நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன். நான் மேற்படி சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றாலும் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க இன்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.